## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்பு கலைமாணித் தேர்வு 2011/2012
## (February/March 2014)

# ECOS 3101 International Economics

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

01. (அ) சர்வதேச பொருளாதாரம் என்றால் என்ன?

(06 புள்ளிகள்)

(ஆ) சர்வதேச வர்த்தகத்தின் நலன்கள் மற்றும் குறைகளை அண்மைக்கால உதாரணங்களின் மூலம் விளக்குக.

(09 புள்ளிகள்)

(இ) வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு சர்வதேச வர்த்தகம் எவ்வாறு துணை செய்கின்றதென்பதை விபரிக்குக.

(10 புள்ளிகள்)

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

02. (அ) மாறா சந்தர்ப்ப செலவினைப் பயன்படுத்தி ஒரு நாடு வர்த்தகத்தில் ஈடுபடும் போது பெற்றுக் கொள்ளும் நன்மைகளை பொருத்தமான அட்டவணை வரைபடங்கள் மூலம் விளக்குக.

(07 புள்ளிகள்)

(ஆ) சர்வதேச வர்த்தகத்தில் அதிகரித்துச் செல்லும் சந்தர்ப்பச் செலவு எவ்வாறு சாதகமான வர்த்தகத்தினை ஏற்படுத்தும் எனக் காட்டுக.

(08 புள்ளிகள்)

(இ) நாடுகளுக்கிடையிலான வர்த்தக நன்மைகளை "வழங்கல் வளையி" மூலம் எவ்வாறு காட்ட முடியும்?

(10 புள்ளிகள்)

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

03. (அ) சர்வதேசம் பற்றிய தொன்மைக் கோட்பாடுகளுக்கும் நவீன கோட்பாடுகளுக்குமிடையிலான வேறுபாடுகளைக் காட்டுக.

(07 புள்ளிகள்)

(ஆ) "ஹெக்ஸர் - ஒஹ்லின் ஆகியோரது நவீன சர்வதேச வர்த்தகக் கோட்பாடு பெருமளவிற்கு நடைமுறைக்கு பொருத்தப்பாடுடையது". இக் கூற்றை ஏற்றுக் கொள்வீரா? வரைபடங்களின் துணை கொண்டு உமது வாதத்தை முன்வைக்குக.

(08 புள்ளிகள்)

(இ) காரணி விலை சமப்படுத்தும் கோட்பாட்டினை விளக்குக.

(10 புள்ளிகள்)

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

04. (அ) தீர்வை விதிப்பினால் ஏற்படக்கூடிய விளைவுகளை விளக்குக.

(08 புள்ளிகள்)

(ஆ) வரி விதிப்பானது இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தினை மதிப்பிடுக.

(07 புள்ளிகள்)

(இ) மேற்குலக நாடுகள் இலங்கைக்கு பொருளாதாரத் தடை விதித்தால் இலங்கையினுடைய பொருளாதார கட்டமைப்பில் ஏற்படும் மாற்றங்களை தரவுகளுடன் எதிர்வு கூறுக.

(10 புள்ளிகள்)

05. (அ) உலகின் பற்பல நாடுகளின் பொருளாதாரங்களை இணைத்ததாக பொருளாதாரக் கூட்டுக்கள் [Economic Integration] காணப்படுகின்றன. நீர் நன்கு அறிந்த பொருளாதார கூட்டுக்களின் தந்திரோபாய ரீதியிலான முக்கியத்துவத்தையும் அக்கூட்டுக்களில் உள்ள நாடுகளுக்கு ஏற்படக்கூடிய பொருளியல் சார் சாதக பாதகங்களை விளக்குக

(மொத்தம் 25 புள்ளிகள்)

06. பின்வருவன தொடர்பாக சிறு குறிப்பெழுதுக.

(அ) இலங்கையின் சர்வதேச வர்த்தகம்.

(ஆ) சர்வதேச நிதி நெருக்கடி.

(இ) தீர்வை அற்ற தடைகள்.

(ஈ) இலத்திரனியல் வர்த்தகம்.

(உ) உடனடி முன்னோக்கிய நாணய மாற்று வீதங்கள்

(மொத்தம் 25 புள்ளிகள்)